Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

**FSA** **3965–18**

(For the candidates admitted from 2009 – 2010 to 2015 – 2016)

B.A., B.L./ B.A. LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018.

(Five Years Regular Course)

Fourth Year – Seventh Semester

# BANKING LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Define Negotiable Instrument. What are the various types of negotiable instruments according to the Negotiable Instruments Act 1881?

   மாற்றுமுறையாவணம் என்பதை வரையறை செய்க: மாற்றுமுறையாவணச் சட்டம் 1881யின் படி பல்வேறு வகையான மாற்றுமுறையாவணங்கள் யாவை?

https://www.tndaluonline.com

2. Describe the duties and liabilities of paying bankers.

பணம் வழங்கும் வங்கியரின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை விளக்குக.

3. Nationalisation of banks has brought changes in the Indian Banking System – Discuss.

வங்கிகளின் தேசியமயமாக்குதல் இந்திய வங்கிகளில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது – விவாதிக்க.

4. What is meant by the term crossing a cheque? State the various types of crossing.

காசோலையைக் குறுக்கிடல் என்றால் என்ன? பலவகையான குறுக்கிடல்கள் பற்றி எழுதுக.

5. State the liabilities of banker in case of bank robberies and fraud by bank employees.

வங்கியில் ஏற்படும் களவு மற்றும் வங்கி ஊழியர்கள் மோசடி செய்தாலோ வங்கியின் பொறுப்பு நிலையை குறிப்பிடுக.



## PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதுக :

(a) Secure electronic transactions

நம்பத்தக்க மின் பரிவர்த்தனை

(b) Special status of RBI

இந்திய ரிசர்வ் வங்கியின் சிறப்பு தகுதிநிலை

(c) System of modern banking

நவீன வங்கி அமைப்பு முறை

(d) Scheduled banks and Non-Scheduled banks

அட்டவணை வங்கிகளும் மற்றும் அட்டவணை சாரா வங்கிகளும்

(e) Maturity of Negotiable Instrument

மாற்றுமுறையாவணத்தின் முதிர்ச்சி

(f) The procedure to be adopted by a banker while opening a new account

ஒரு புதிய கணக்கு ஆரம்பிக்கும்பொழுது வங்கியர் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை

(g) Amalgamation of Banking Companies

வங்கி நிறுவனங்களை இணைத்தல்



https://www.tndaluonline.com

(h) Safety Deposit Lockers

பாதுகாப்பு வைப்பீடு பெட்டகம்

(i) Different types of deposits

பல்வேறு வகையான வைப்பீடுகள்

(j) Liability for dishonour of cheques

காசோலைகள் மதிப்பு மறுப்பினால் ஏற்படும் பொறுப்பு நிலை

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (in not exceeding 2 pages each) by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Ram executes a promissory note on attaining majority in consideration of money advanced to him while he was a Minor. Can Ram be successfully sued on the promissory note?

ராம் என்பவர் தான் இளவராக இருந்தபோது பெற்றிருந்த கடனுக்கு அவர் வயது வந்தவுடன் ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுக்கிறார். கடனாளர் அவர் மீது வழக்கொன்று தொடர்ந்து வெற்றிபெற முடியுமா?



8. 'A' obtains a cheque and puts it in his coat pocket. The coat is sent for dry wash. Consequently the cheque becomes faded. Can the bank refuse to pay it?

'A' என்பவர் காசோலை ஒன்றினைப் பெற்று அதனை மேலங்கியில் உள்ள பாக்கெட்டில் வைத்துக் கொள்கிறார். அந்த மேலங்கியை உலர் சலவைக்காக கொடுத்தனுப்புகிறார். அதன் விளைவாக அந்த காசோலை மங்கி விடுகிறது. வங்கியர் அந்த காசோலையை ஏற்க மறுக்கலாமா?

9. Two cheques drawn by a customer for Rs. 5,000 and for Rs. 10,000 are presented at the same time and the customer's balance is sufficient to honour the cheque for Rs. 5,000 only. Bank dishonours both the cheques – Decide.

இரண்டு காசோலைகள் ஒரு வாடிக்கையாளரால் ரூ. 5,000 மற்றும் ரூ. 10,000 என வரைப்பட்டு இரண்டும் ஒரே சமயத்தில் பணம் பெறுவதற்காக வங்கியில் முன்னிடல் செய்யப்படுகிறது. வாடிக்கையாளரின் கணக்கில் உள்ள பணம் ரூ. 5,000த்திற்கான காசோலைக்கு மட்டுமே போதுமானதாக இருக்கிறது. வங்கி இரண்டு காசோலைகளையும் நிராகரித்து விடுகிறது – தீர்மானிக்க.



https://www.tndaluonline.com

10. "I promise to pay 'B' Rs. 50,000 on D's death provided 'D' leaves me enough property to pay that sum". Can it be treated as a promissory note?

"D என்பவர் இறக்கும் போது போதுமான சொத்தை விட்டுச் சென்றால் நான் Bக்கு ரூ. 50,000 தர உறுதியளிக்கிறேன்". இதனை கடனுறுதிச்சீட்டு என்று கொள்ளலாகுமா?

11. A cheque is drawn, payable to "Murali or order". It is stolen and Murali's indorsement is forged. The banker pays the cheque in due course. Is the banker discharged from liability?

முரளி என்பவரோ அல்லது அவரது ஆணைப் பெற்றவரோ பெறும்படியாக ஓர் காசோலை வரையப்பட்டிருந்தது. அந்தக் காசோலை களவாடப்பட்டு முரளி என்பவருடைய மேற்குறிப்பும் பொய்யாக புனையப்பட்டிருந்தது. வங்கி வழக்க முறைப்படி அக்காசோலைக்குறிய பணத்தை செலுத்திவிட்டது. வங்கியர் பொறுப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டவரா?

12. A bankers pays a cheque crossed generally over the counter. Is he liable to the drawer or to the payee of the cheque?

ஒரு பொது குறுக்கு கோடிட்ட காசோலை ஒன்றை வங்கியர் கொடுக்கல் வாங்கல் மூலம் பணம் செலுத்திவிட்டார். அந்த வங்கியர் காசோலை வரைந்தவருக்கோ அல்லது பணம் பெறுபவருக்கோ பொறுப்பாவாரா?



https://www.tndaluonline.com